1971 ஜூன் 22]

இல்லாமல் இருந்து வந்திருக்கிறது. பழைய பை-லாப்படி கூட அதிகாரிகள் மீது குற்றம் இருந்தால், நிச்சயமாக நடவடிக்கை எடுத்துத் தண்டிக்கிறோம். அப்படிப்பட்ட பல உதாரணங்களை நான் கொடுக்க முடியும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : *சார், 1966-ல் குற்றத்தைக் கண்டுபிடித்து, 70-ல் தண்டிப்பது என்றால், காலதாமதம் ஏற்பட்டு, அமைச்சர்களே, அமைச்சரவையே கூட மாறிவிடும் சூழ்நிலைகள் இருப்பதால், சிவில் குற்றமாக இருந்தாலும், துரிதமாக ஓரிரு ஆண்டுகளில் குற்றவாளிகளைத் தண்டிக்க நடவடிக்கை எடுக்கப் படுமா என்று அறியவிரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : *தலைவர் அவர்களே, 1966-ல் குற்றம் கண்டுபிடிக்கப்படவில்லை. 1966-ல், 11—2—1966-ல் குற்றம் செய்யப்பட்டது. குற்றம் நடந்த தேதி அது. கண்டு பிடிக்கப்பட்டது, விசாரணை நடந்து மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உத்தரவு போடப்பட்டது 1968-ல். விசாரணை பூராவும் நடந்து முடிந்து, பணத்தைத் திரும்பக் கொடுக்க வேண்டும் என்ற உத்தரவு போட்டது 7-9-1970-ல். இதில், அதிகமான காலதாமதம் என்று சொல்ல முடியாது. நடந்தது 66-ல். அதை ரொம்பச் சாதுரியமாகச் செய்திருக் கிறார்கள். (சிரிப்பு.)*

Training in cultivation of mushrooms

* 24 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there is any proposal to start Training Centres for the cultivation of mushrooms in the State; and

(*b*) if so the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :

(அ) இல்லை, ஐயா.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : *தலைவர் அவர்களே, சாதாரண மாக காளான்களைச் சாப்பிடுகிறவர்கள் நம் நாட்டில் எப்படி இருந்தாலும், மேலை நாடுகளில் விரும்பிச் சாப்பிடுகிறவர்கள் இருக்கிறார்கள். ஆகவே இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, திடீர் திடீர் என்று வரும் காளான்கள் என்று இல்லாமல், நல்ல வற்றை வளர்க்க, பயிற்சி நிலையங்களை அமைக்க அமைச்சர் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, களான்களில் பல வகைகள் இருக்கின்றன. தமிழகத்தில் காளான் பண்ணை வைத்துப் பயிர் செய்ய செயற்குறிப்பு இப்பொழுது இல்லை. ஆனால், கோவையில் விவசாயக் கல்லூரியிலும், இன்னும் சென்னையிலும், அதுபற்றி அவ்வப்பொழுது அறிவிக்கப்படுகிறது.

TRUTH ALONE TRIUMPHS

[1971 ஜூன் 22

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, காளான் களில் நேற்று முளைத்த காளான் பற்றி அமைச்சருக்குத் தெரியுமா?

(பதில் இல்லை)

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவர் அவர்களே, அரசியல் காரணங்களைக் கொண்டு வளர்க்கப்படும் காளான்கள் பற்றி ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அப்படிப்பட்ட காளான்களைப் பற்றி இப்பொழுது சொல்வதற்கில்லை.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, காளான்களிலிருந்து பெனிசிலின் தயாரிக்கப்படுகிறது. ஆகவே, தமிழ் நாட்டில் காளான் பண்ணைகளை அமைத்து, பெனிசிலின் உற்பத்திக்கு வெளி நாடுகளுக்கு அனுப்பி, அந்நியச் செலாவணி பெற அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, காளான் உற்பத்தியில் பல வகை இருக்கிறது. கோவைக் கல்லூரி யில் காளான் விதை ரூ. 1.50 என்று விற்கப்படுகிறது. அதை வாங்கிப் பயிரிடலாம். காளான் வளர்ச்சிக்கு சூரிய வெளிச்சம் இல்லாமலும், மழை, காற்று இல்லாமலும் இருக்கக்கூடிய இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு உற்பத்தி செய்யப்பட வேண்டும்.

திரு. கோவைச் செழியன் : தலைவர் அவர்களே, கோவை விவசாயக் கல்லூரியில் காளான் உற்பத்தி செய்யும் நிலையமும், விற்பனை நிலையமும் முன்பு இருந்தது. சில ஆண்டுகளுக்கு முன்னால் அது இருந்தது. அது இப்பொழுதும் இருக்கிறதா ? அல்லது மூடிவிட்டாகி விட்டதா ? மேலும், காளான் என்பது 'வெஜிடேரியன்' உணவா அல்லது நான்-வெஜிடேரியன் உணவா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : கோவையில் எந்த எந்த அளவில் பயன்படுத்தலாம் என்று பார்த்து செய்யப் படுகிறது. தனியாகக் கேள்வி போட்டால், குறிப்புகளைக் கொடுக்க முடியும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், காளான் சத்துள்ள உணவு என்று சொல்லப்படுகிறது. ஆகவே, உடனடியாக அரசாங்கம் நடவடிக்கை எடுத்து, மக்கள் சாப்பிடக் கூடிய அளவில் உற்பத்தி செய்ய ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இப்பொழுது அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சத்துள்ள உணவா இல்லையா என்று எனக்குத் தெரியாது. ஆனால் சத்துள்ளது என்று இருந்தால், அது ஏற்றுக்கொள்ளப்படும்.